உ
சிவமயம்

# செய்தி மடல்

## அகில இலங்கை இந்து மாமன்றம்
## ALL CEYLON HINDU CONGRESS

விரோதி வருடம்
வைகாசித்
திங்கள் 18ம்
நாள்
[01.06.2009]

தலைமையகம் : இல. 91/5, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, கொழும்பு-02. இலங்கை
தொலைபேசி : 011 2434990 - தொலைநகல் : 011 2344720, மின்னஞ்சல்: hinducongress@gmail.com

## இந்த மடலில்....






வவுனியாவில் நிவாரணப் பொருட்கள் விநியோகம்

(பக்கம் 03)



மனிதநேயர் வி. கயிலாசபிள்ளை அவர்களுக்கு கௌரவம்.

(பக்கம் 03)

# வன்னியில் இடம்பெயர்ந்தோருக்கு மாமன்றத்தின் நிவாரணம்


கடந்த சில மாதங்களில் போர்ச் சூழ்நிலைகள் காரணமாக வன்னியிலிருந்து இடம்பெயர்ந்துவந்து வவுனியா முகாம்களில் தங்கியிருக்கும் பொதுமக்களுக்கு மாமன்றம் பலவிதங்களில் உதவி வருகிறது. கடந்த மார்ச் மாதத்தில் ஆரம்பமான மாமன்றத்தின் நிவாரண உதவிகள் இப்போதும் தொடர்கின்றன.

வன்னியிலிருந்து பொதுமக்கள் இடம்பெயர ஆரம்பித்தபோது, அதாவது கடந்த பெப்ரவரி மாத இறுதியில் இந்து மக்களிடம் நிவாரண உதவிகள் கேட்டு மாமன்றம் துண்டுப் பிரசுரங்கள் ஊடாக வேண்டுகோள் விடுத்திருந்தது. இந்த மனிதநேயப் பணிக்கு உதவும் வகையில் இந்து மக்கள் பலர் தங்கள் பங்களிப்பாக பொருட்களையும், நிதியுதவிகளையும் மாமன்றத்திற்கு வழங்கினார்கள்.

முதற்கட்ட நிவாரண உதவியாக மாமன்றம் கடந்த மார்ச் மாதத்தில் 132,600/= ரூபா பெறுமதியானதும், ஏப்ரல் மாதத்தில் 207,100/= பெறுமதியானதுமான உப உணவுப் பொருட்களை - குறிப்பாக, அரிசி, சீனி, பருப்பு, தேங்காய் எண்ணெய், மிளகாய்த் தூள், உருளைக் கிழங்கு, உப்பு, பப்படம் உட்பட கறிச்சரக்கு வகைகளையும் அனுப்பிவைத்திருந்தது.

இந்த உதவிப் பணிக்காக ஏராளமான இந்து மக்கள் உலர் உணவுப் பொருட்கள், தண்ணீர்ப் போத்தல்கள், பிஸ்கட், குழந்தைகளுக்கான பால்மா மற்றும் உடுப்பு வகைகளுடன் நிதியுதவிகளையும் தொடர்ந்து வழங்கி வருகிறார்கள். இவ்வகையில் சேகரிக்கப்படும் நிவாரணப் பொருட்களையும், நிதியுதவியுடன் வாங்கப்படும் அத்தியாவசியப் பொருட்களையும் வவுனியா முகாம்களுக்கு மாமன்றம் அனுப்பிவருகிறது.

வவுனியா முகாம்களில் தங்கியிருக்கும் நோயாளர்களுக்காக 115,000/= ரூபா பெறுமதியான துவாய்களையும், 135,000/= ரூபா பெறுமதியான படுக்கை விரிப்புகளையும் மாமன்றம் அனுப்பி வைத்துள்ளது. இதுதவிர, பனடோல் மாத்திரைகளும் அனுப்பப்பட்டுள்ளன. வவுனியா முகாம்களிலுள்ள மாணவர்களுக்காக மாமன்றம் 10000 அப்பியாசப் புத்தகங்களையும் வழங்கியிருக்கிறது. *(தொடர்ச்சி 2ம் பக்கம்)*



கொழும்பில் நிவாரணப் பொருட்கள் ஏற்றும்பொழுது மாமன்ற உறுப்பினர்கள்

## வாழ்த்து

*வாழ்கவே வாழ்கவென் நந்தி திருவடி*
*வாழ்கவே வாழ்க மலமறுத் தான்பதம்*
*வாழ்கவே வாழ்கமெஞ் ஞானத் தவன்தாள்*
*வாழ்கவே வாழ்க மலமிலான் பாதமே.*

**விரோதிவருடம்வைகாசித்திங்கள் 18ம் நாள் ( 01.06.2009 )**

# மாமன்றத்தின் குரல்

உங்கள் அனைவருக்கும் எங்கள் அன்பு வணக்கம். மாமன்றத்தின் மற்றுமொரு செய்திமடல் ஊடாக உங்களைச் சந்திப்பதில் மனநிறைவு கொள்கின்றோம்.

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் செய்திகளையும் மற்றும் செயற்பாடுகள், வேலைத்திட்டங்கள் தொடர்பான தகவல்களையும் இந்து மக்களுக்கு அறியத்தரும் வகையில் இந்தச் செய்திமடல் வெளியிடப்படுகிறது. கடந்த காலங்களில் அவ்வப்போது வெளியிடப்பட்டு வந்த செய்திமடலை, இனிமேல் மாதந்தோறும் வெளியிட உத்தேசித்துள்ளோம்.

பெரும்பாலான தமிழ்மக்கள் பலவித இழப்புகளையும் இடப்பெயர்வுகளையும் சந்தித்தவண்ணம் வேதனைகளுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் காலகட்டம் இது. இந்த நிலையில் இவர்கள் அனைவருக்கும் உதவுவது எங்கள் கடமையாகும்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்து மக்கள் ஒவ்வொருவரும் தங்களால் இயன்றவகையில் உதவிகள் வழங்கவேண்டும். மாமன்றம் முன்னெடுத்துச் செல்லும் இத்தகைய மனிதநேயப் பணியில் இந்து மக்கள் அனைவரும் இணைந்து கொள்ளவேண்டும் என்பது எங்கள் விருப்பமாகும்.

சமகால துரதிர்ஸ்டவசமான நிலைமைகள் முற்றாகவே நீங்கி, எங்கள் மக்களது வாழ்வில் மகிழ்ச்சியும், நிம்மதியும் சேர்ந்த ஒளிமயமானதொரு எதிர்காலம் விரைவில் அமையவேண்டும்; அது நிரந்தரமான அமைதி நிலையாக தொடர வேண்டும் என்பதே எங்கள் அனைவரினதும் எதிர்பார்ப்பும் விருப்பமுமாகும். இதற்காக அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானைப் பிரார்த்திப்போமாக!

வணக்கம்

**கந்தையா நீலகண்டன்**
*பொதுச் செயலாளர், அகில இலங்கை இந்து மாமன்றம்.*

**வன்னியில் இடம்பெயர்ந்தோருக்கு....** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து மன்னாருக்கு வந்துள்ள பொதுமக்களுக்கும் மாமன்றம் நிவாரண உதவிகளை வழங்கி வருகிறது. குறிப்பாக முதியோர்கள் தங்குவதற்கான இருப்பிட வசதிகளை செய்து கொடுப்பதற்கும் உணவு மற்றும் நிவாரண, பராமரிப்புத் தேவைகளுக்காகவும் மாமன்றத்தின் அங்கத்துவ சங்கமான மன்னார் மாவட்ட இந்து ஆலயங்களின் ஒன்றியத்திற்கு மாமன்றம் 500,000/= ரூபாவை வழங்கியிருக்கிறது. அத்துடன் உலக சைவப் பேரவையும் மாமன்றத்தின் ஊடாக 180.000/= ரூபா நிதியுதவியை வழங்கியிருக்கிறது. மாமன்றத்தினால் அரிசி, சீனி, பருப்பு, பிஸ்கட், தண்ணீர்ப் போத்தல்கள், சவர்க்காரம், உடுப்புகள், படுக்கை விரிப்புகள், குழந்தைகளுக்கான பால்மா மற்றும் பனடோல் மாத்திரைகள் போன்ற பொருட்களும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இடம்பெயர்ந்த வன்னி மக்களுக்கு உதவும் வகையில் நிவாரணப் பொருட்களை சேகரிக்கும் பணி கடந்த மூன்று மாதங்களாக பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபம், கொழும்பு மகளிர் இந்து மன்றம், விவேகானந்த சபை ஆகிய இடங்களில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்த மனிதநேயப் பணிக்கு மாமன்றத் தலைவர்திரு. வி. கயிலாசபிள்ளை மற்றும் மாமன்ற சமூகநலன் குழுத் தலைவர் திரு. சின்னத்துரை தனபாலா குழுச் செயலாளர் திரு.மு. கதிர்காமநாதன், கொழும்பு மகளிர் இந்து மன்றத் தலைவி திருமதி வ. தவயோகராஜா, விவேகானந்த சபை பொதுச் செயலாளர் திரு. க. விவேகானந்தன், மற்றும் முகாமைப் பேரவை உறுப்பினர்களான திரு. செ.தி.கனகலிங்கம், திரு. வி. நடராஜா, திருமதி வானதி இரவீந்திரன், திரு. க. இரவீந்திரன் ஆகியோர் பெரும் பங்களிப்புச் செய்து வருவதுடன், பிரதான சேகரிப்பு நிலையமான சரஸ்வதி மண்டபத்தில் மாமன்ற முகாமைப் பேரவை உறுப்பினர்கள் பலர் தினந்தோறும் உதவி வருவதையும் சிறப்பாகக் குறிப்பிட வேண்டும்.

## சிவாச்சாரியார்களுக்கு நூல்கள் வழங்கும் வைபவம்.

மாமன்றத்தால் வெளியிடப்பட்ட சிவஸ்ரீ குமாரசாமிக் குருக்கள் இயற்றிய சிவாகமசேகரம் பிரதிட்டா விதி (முதலாம் பாகம்) சிவலிங்கப் பிரதிஷ்டா விதி (இரண்டாம் பாகம்) ஆகிய இரு நூல்களையும் சிவாச்சாரியார்களுக்கு இலவசமாக வழங்கும் வைபவம் கடந்த ஏப்ரல் 19ம் திகதியன்று பிற்பகல் 1.30 மணி முதல் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது.

மாமன்றத் தலைவர் திரு. வி. கயிலாசபிள்ளை தலைமையில் நடந்த இந்த வைபவத்தில் ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் க. வி. விக்னேஸ்வரன் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டதுடன் மேற்படி நூல்களின் மகிமையை எடுத்துக்காட்டி சிறப்புரையும் ஆற்றினார். இந்நிகழ்வில் பல சிவாச்சாரியார்கள் கலந்துகொண்டு நூல்களைப் பெற்றுக்கொண்டார்கள்.

# தெய்வத்திருமகள் நினைவு மலர் வெளியீடு



சைவத் தமிழுலகம் போற்றும் தெய்வத்திருமகள் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களது முதலாவது சிராத்த தினத்தையொட்டி "சிவத்தமிழ்ச் செல்வியின் வாழ்க்கையும் பணிகளும்" என்ற பெயரில் நினைவு மலரொன்றை வெளியிடுவதற்கான ஏற்பாடுகளை மாமன்றம், தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் ஆதரவுடன் செய்து வருகின்றது. இந்த நினைவு மலரின் தொகுப்பாசிரியர்களாக மாமன்றப் பொதுச் செயலாளர் திரு. கந்தையா நீலகண்டன், மாமன்ற உபதலைவர் செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் ஆகியோர் பணியாற்றுகிறார்கள்.

இது தொடர்பான செயலமர்வு நிகழ்வுகள் கடந்த மே மாதம் 17ம், 24ம் திகதிகளில் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் மாமன்றப் பொதுச் செயலாளர் திரு. கந்தையா நீலகண்டன் நெறிப்படுத்தலில் நடைபெற்றன. பேராசிரியர் அ. சண்முகதாஸ், கலாநிதி கு. சோமசுந்தரம், கம்பவாரிதி இ. ஜெயராஜ், சைவப்புலவர் சு. செல்லத்துரை, செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன், சிவஸ்ரீ ம. பாலகைலாசநாதசர்மா, அருள்மொழியரசி திருமதி வசந்தா வைத்தியநாதன், திருமதி பவானி முகுந்தன் ஆகியோர் கலந்து கொண்டு தமது ஆக்கங்களைப் பற்றிய கருத்துரைகளை வழங்கினார்கள்.

இந்நினைவு மலருக்கு சிவஸ்ரீ விஸ்வ நாராயணசர்மா, யாழ் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ந. சண்முகலிங்கன், சப்ரகமுவ பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் ஆகியோரும் ஆக்கப் பங்களிப்புச் செய்கிறார்கள்.

தெய்வத்திருமகள் அன்னையின் முதலாவது சிராத்த தினமான எதிர்வரும் ஜூலை மாதம் 3ம் திகதியன்று யாழ்ப்பாணத்தில் மேற்படி நினைவு மலர் வெளியிடப்படவிருக்கிறது.

மலரின் வெளியீட்டுக்கு மாமன்றத்தின் அங்கத்துவ சங்கமான கொழும்பு மகளிர் இந்து மன்றமும் அனுசரணை தருவதுடன், கொழும்பில் இதன் வெளியீட்டு விழாவை நடத்துவதற்கான ஏற்பாடுகளையும் செய்கிறது.

# மாமன்றத்தின் பங்களிப்பு

கடந்த வாரத்தில் சமூகசேவை மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கௌரவ டக்ளஸ் தேவானந்தா அவர்களும், வடக்கின் வசந்தம் செயலணித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான திரு. பசில் ராஜபக்ஷ அவர்களும் ஏற்பாடு செய்து நடத்திய சந்திப்பு நிகழ்வுகளில் மாமன்றத்தின் அலுவலர்களும், தொண்டர்களும் கலந்து கொண்டனர். இந்த இரு நிகழ்வுகளிலும் , பாதிக்கப்பட்ட வன்னி மக்களுக்கான நிவாரணப் பணி மற்றும் செயற்பாடுகள் தொடர்பாக கலந்தாலோசிக்கப்பட்டது. இது விடயத்தில் மாமன்றத்தினால் முன்வைக்கப்பட்ட பல கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

பிரிந்த நிலையில் வெவ்வேறு நலன்புரி முகாம்களில் தங்கியிருக்கும் குடும்பத்தினரை ஒன்றிணைக்க வேண்டும் என்ற மாமன்றத்தின் முக்கிய வேண்டுகோள் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதன்படி, பிரிந்திருக்கும் குடும்பத்தினரின் விபரங்களைக் குறிப்பிட்டு 011–2344720 அல்லது 011–2371111 என்ற தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்பிவைக்கலாம். பம்பலப்பிட்டி இல. 75, லோறன்ஸ் வீதியில் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்திலும் விபரங்களை கையளிக்கலாம். சரியான விபரங்கள் கிடைக்கும் பட்சத்தில் மாமன்றம் சமூகசேவை அமைச்சையும் ஜனாதிபதி செயலகத்தையும் தொடர்புகொண்டு ஆவன செய்யும்.

பெற்றோரை இழந்து வாடும் பத்து வயதிற்கு உட்பட்ட சிறு பிள்ளைகளில் 500 பேரை இரத்மலானை கொழும்பு இந்துக் கல்லூரி விடுதியில் வைத்துப் பராமரிப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்படுகின்றன.

வவுனியா வைத்தியசாலைக்குத் தேவையான மருந்து வகைகளை அரசாங்கம் உடனடியாக அனுப்பிவைக்க வேண்டும் என்றும், நலன்புரி முகாம்களுக்குத் தேவையான மேலதிக நீர் வசதிகள் உடனடியாக வழங்கப்படவேண்டும் என்றும், இடம்பெயர்ந்த மாணவர்களுக்குரிய கல்வி வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும் என்றும், நலன்புரி முகாம்களிலுள்ள முதியோர்களை வெளியிலுள்ள உறவினர்கள் அழைத்துச்சென்று பராமரிப்பதற்கான அனுமதியை வழங்கவேண்டும் என்றும், நலன்புரி முகாம்களில் தங்கியிருப்பவர்களுக்கு உள்நாட்டு/வெளிநாட்டு நண்பர்கள், உறவினர்கள் நிதியுதவி செய்யும் வகையில் அவர்களது பெயர்ப்பட்டியல் இணையத்தளத்தில் வெளியிடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும் என்றும், நலன்புரி முகாம்களில் கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமிஜி சர்வரூபானந்தா மகராஜ் அவர்களின் தலைமையில் பிரார்த்தனை நிகழ்ச்சிகளை நடத்துவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும் என்றும், வன்னியிலிருந்து இடம்பெயர்ந்த பொதுமக்களை ஆறுமாத காலத்திற்குள் அவர்களது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தும் ஏற்பாடுகளும் செய்யப்பட வேண்டும் என்றும் மாமன்றத்தினரால் விடுக்கப்பட்ட வேண்டுகோள்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

# மாமன்றக் குழுவினர் வவுனியா நலன்புரி முகாம்களுக்கு விஜயம்

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வந்து வவுனியாவிலுள்ள நலன்புரி முகாம்களில் தங்கியிருக்கும் பொதுமக்களையும், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருபவர்களையும் நேரில் பார்வையிடுவதுடன், மாமன்றமும் அதன் அங்கத்துவ சங்கங்களும் சேகரித்த அத்தியாவசிய நிவாரணப் பொருட்களை வழங்குவதற்காகவும் கொழும்பிலிருந்து மாமன்ற சமூகநலன் குழுவின் பிரதிநிதிகள் கடந்த மே 27ம் திகதியன்று வவுனியா பயணமானார்கள். சமூகசேவை மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கௌரவ டக்ளஸ் தேவானந்தா இது தொடர்பான ஏற்பாடுகளை செய்துகொடுத்திருந்தார்.

மாமன்றக் குழுவினர் மே 28ம் திகதி வவுனியா வைத்தியசாலைக்கும், மறுநாள் 29ம் திகதியன்று செட்டிகுளம் இராமநாதன் நலன்புரி முகாமுக்கும் சமூகசேவை மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கௌரவ டக்ளஸ் தேவானந்தா தலைமையில் சென்றிருந்தனர்.

வவுனியா வைத்தியசாலையிலும், வைத்தியசாலையை அடுத்திருக்கும் முகாம்களிலும் தங்கியிருக்கும் நோயாளிகளுக்கு படுக்கை விரிப்புகள், துவாய், சாரம், உடுபுடவைகள் மற்றும் சமபோசா சத்துணவு, பிஸ்கட், சவர்க்காரம், பாதணி போன்ற அத்தியாவசியப் பொருட்களை வழங்கியதுடன் விபூதிப் பிரசாதம், மாமன்ற வெளியீடான சிவ வழிபாட்டு மலர் – பிரார்த்தனை நூலையும் கொடுத்து நோயாளிகளது சுகநலத்திற்காக ஆண்டவன் அருளை வேண்டிப் பிரார்த்தனையும் செய்து கொண்டார்கள். வவுனியா நலன்புரி முகாம்களில் தங்கியிருக்கும் மாணவர்களுக்கு அப்பியாசப் புத்தகங்களையும் மாமன்றக் குழுவினர் வழங்கியிருந்தார்கள்.

மாமன்றத்தின் நிவாரணப் பொருட்களை கொழும்பிலிருந்து வவுனியாவுக்கு எதுவித கட்டணமுமின்றி எடுத்துச் செல்வதற்கு வாகன வசதியை வழங்கிய திரு. தி. துவாரகேஸ்வரன் அவர்களுக்கு மாமன்றம் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது. வவுனியாவில் நலன்புரி முகாம்களில் நிவாரணப் பொருட்களை விநியோகம் செய்வதற்கு புறக்கோட்டை வர்த்தகர் சங்கத்தினரும், வன்னி மேம்பாட்டு நிதியத்தைச் சேர்ந்தவர்களும் மாமன்றத்திற்கு பெரிதும் உதவியிருந்தார்கள்.

வவுனியா சென்றிருந்த மாமன்றக் குழுவில் திரு. எஸ். ரி. எஸ். அருளானந்தன், திரு. எஸ். தனபாலா, திரு. மு. கதிர்காமநாதன், திரு. ந. கார்த்திகேயன், திரு. ரி. கிரிதரன், திரு. கே. ஆனந்தராஜா, திரு. இ. இராஜ்குமார், திரு. கோ. இளையராஜா ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

# இடம்பெயர்ந்த சிவாச்சாரியார்களுக்கு மாமன்றத்தின் நிதியுதவி

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வவுனியாவில் தங்கியிருக்கும் சிவாச்சாரியார்களுக்கு உணவுத் தேவைக்காக மாமன்றம் நிதியுதவி செய்து வருகிறது. இதுவரையில் இரு தடவைகள் – அதாவது மார்ச் மாதத்தில் 50,000/– ரூபாவும், மே மாதத்தில் 125,000/– ரூபாவும் மாமன்றத்தின் நிதியுதவியாக சிவாச்சாரியார்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மாமன்றத்தின் அங்கத்துவ சங்கமான வவுனியா ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய பரிபாலன சபையின் ஊடாகவே நிதியுதவி செய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

# "எல்லோரும் இன்புற்றிருக்க.... மனிதநேயப் பணிகள்" நூல் வெளியீடும் மாமன்றத் தலைவரின் 75வது அகவை நிறைவு வைபவமும்

மாமன்றத் தலைவர் மனிதநேயர் வி. கயிலாசபிள்ளை அவர்களின் 75வது அகவை நிறைவையொட்டி அகில இலங்கை இந்து மாமன்றமும், மனிதநேய நிதியமும் இணைந்து சிறப்பு நிகழ்வொன்றை ஏற்பாடு செய்து கடந்த மார்ச் 29ம் திகதியன்று காலை, இரத்மலானை கொழும்பு இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடத்தியிருந்தன.

கல்லூரி வளாகத்திலுள்ள ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தில் நடந்த பூசை வழிபாட்டைத் தொடர்ந்து உச்ச நீதிமன்ற நீதியரசர் மாண்புமிகு க. ஸ்ரீபவன் அவர்களது தலைமையில் ஆரம்பமான இந்த வைபவத்தில் திரு. வி. கயிலாசபிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். நல்லை ஆதீன முதல் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்கினார். கம்பவாரிதி இ. ஜெயராஜ் "எல்லோரும் இன்புற்றிருக்க...." எனும் பொருளில் சிறப்புரையாற்றினார். திரு. கந்தையா நீலகண்டன் அவர்களது தொகுப்பில் அமைந்த "எல்லோரும் இன்புற்றிருக்க... மனித நேயப் பணிகள்" என்ற நூலும் வெளியிட்டு வைக்கப்பட்டது. திரு. வி. கயிலாசபிள்ளை அவர்களின் மனிதநேயப் பணிகளைப் பாராட்டும் வகையில், அவருக்கு நல்லை ஆதீனத்தின் சார்பாக ஆதீன முதல்வர் "மனிதநேயர்" என்ற பட்டமளித்து கௌரவித்தார்.

இந்த நிகழ்வின் இன்னொரு சிறப்பம்சமாக, சிவாச்சாரியார்களின் தேவைகருதி அச்சுவேலி சிவஸ்ரீ குமாரசாமிக் குருக்களின் நூல்களான சிவாகமசேகரம் பிரதிட்டா விதி (முதலாம் பாகம்) சிவலிங்கப் பிரதிஷ்டா விதி (இரண்டாம் பாகம்) ஆகிய இரு நூல்களினதும் மறுபதிப்புகளை மாமன்றம் வெளியிட்டிருந்தது. திரு. வி. கயிலாசபிள்ளை குடும்பத்தினர் இவ்விரு நூல்களினதும் வெளியீட்டுக்கான நிதியுதவிகளை செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சிவதொண்டர் சிவஞானச்செல்வர் க. இராஜபுவனீஸ்வரன்



மாமன்றத்தின் உபதலைவரும், மாமன்ற சமய விவகாரங்கள் குழுத் தலைவருமான சிவஞானச்செல்வர் க. இராஜபுவனீஸ்வரன் காலமானார் என்பதை மாமன்றம் ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றது.

சிறிதுகாலமாக சுகயீனமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த இவர் கடந்த ஏப்ரல் 3ம் திகதியன்று சிவபதமடைந்தார்.

அமரர் இராஜபுவனீஸ்வரன் அவர்கள் நீண்டகாலமாகவே மாமன்றத்துடன் இணைந்திருந்து மாமன்ற வளர்ச்சிக்கும், சிறப்புக்கும் பெரும்பணியாற்றி வந்துள்ளார். மாமன்ற சமய விவகாரங்கள் குழுவிற்கு தலைமை தாங்கி, சமய ஆன்மிகப் பணியில் பல சிவதொண்டர்களை உருவாக்கியிருப்பதுடன், ''சிவதொண்டர் அணி'' ஊடாக அவர்களது பணி நாடு முழுவதும் பரவும் வகையிலும் தீவிரமாகப் பாடுபட்டவர்.

மக்கள் பணியே இறைபணி என்பதனை மறவாது சுவாமி விவேகானந்தரின் பேரில் உலகிலேயே முதலாவதாக நிறுவப்பட்ட கொழும்பு விவேகானந்த சபையின் பொதுச் செயலாளராகப் பல வருடங்கள் இவர் ஆற்றிய சேவைகள் அளப்பரியது. இந்நாட்டின் சைவசமய வளர்ச்சிக்காக தீவிரமாக உழைத்த இச் சிவதொண்டரின் மறைவு சைவ உலகிற்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

மாமன்றம் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அவரது ஆத்ம சாந்திக்காக அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானை பிரார்த்தித்துக்கொள்கிறது.

## திருமதி மங்கையர்க்கரசி மயில்வாகனம்

அகில இலங்கை இந்து மாமன்ற முகாமைப் பேரவையின் நீண்ட கால உறுப்பினராகவிருந்த தீவிர சமய பக்தரும், சமய அறிஞருமான அமரர் இரா. மயில்வாகனத்தின் துணைவியார் திருமதி மங்கையர்க்கரசி மயில்வாகனம் அவர்களது மறைவையிட்டு மாமன்றம் ஆழ்ந்த வருத்தமடைகிறது.

சுவாமி விபுலானந்தரின் மாணவியான இவர், மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆசிரியராகவும், பின்னர் அதிபராகவும் கடமையாற்றி மாணவ சமுதாயத்திற்கு சிறப்பான வகையில் சேவை செய்திருப்பதுடன், அதனூடாக பல அறிஞர் பெருமக்களை தோற்றுவித்த பெருமையையும் பெற்றுள்ளார்.

இவர், கணவருடன் இணைந்து மாமன்றப் பணிகளை சிறப்பாக முன்னெடுத்துச் செல்வதற்கு பெரிதும் உதவியவர். மாமன்ற நூலகத்திற்கு ஏராளமான நூல்களையும் இவர் அன்பளிப்பாக வழங்கியிருப்பதையும் மாமன்றம் நன்றியுடன் நினைவுகூருகின்றது.

அன்னாரது மறைவையிட்டு குடும்பத்தினருக்கு மாமன்றம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், ஆத்ம சாந்திக்காக அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானைப் பிரார்த்திக்கின்றது.

ს ს ს

## திருமதி இராஜபுவனீஸ்வரன்

அமரர் சிவஞானச்செல்வர் க. இராஜபுவனீஸ்வரன் அவர்களது துணைவியாரின் மறைவுக்கு மாமன்றம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றது. கணவரின் மறைவுக்கு ஒரு மாத காலத்தின் பின், இவர் காலமானார்.

இவரது குடும்பத்தினரது துயரத்தில் மாமன்றமும் பங்கு கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்திபெற அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானைப் பிரார்த்தித்துக் கொள்கிறது.

## அமரர் க. இராஜபுவனீஸ்வரன் நினைவு அஞ்சலிக் கூட்டம்

சிவஞானச்செல்வர் க. இராஜபுவனீஸ்வரன் அவர்களின் மறைவையொட்டி விவேகானந்த சபையும், ஏனைய நிறுவனங்களும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த நினைவு அஞ்சலிக் கூட்டம் கடந்த மே மாதம் 9ம் திகதியன்று காலை கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் சபையின் தலைவர் திரு. ஏ.ஆர். சுரேந்திரன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வின்போது அமரர் இராஜபுவனீஸ்வரன் அவர்களது உருவப்படம் மேல்நீதிமன்ற நீதியரசர் மாண்புமிகு எஸ். ஸ்ரீஸ்கந்தராஜா அவர்களினால் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டதுடன், விவேகானந்த சபையின் வெளியீடான ''விவேகானந்தன்'' சஞ்சிகையின் 84ம் ஆண்டு மலர் அமரரின் நினைவிதழாகவும் வெளியிடப்பட்டது. அகில இலங்கை இந்து மாமன்றத்தின் வெளியீடான ''இந்து மக்களுக்கு ஒரு கையேடு' நூலின் மீள் பதிப்பும் அமரரின் நினைவாக மாமன்றத் தலைவர்திரு. வி.கயிலாசபிள்ளை அவர்களினால் வெளியிட்டு வைக்கப்பட்டது.

மாமன்றத்தின் தலைவர், பொதுச் செயலாளர் மற்றும் சமய நிறுவனங்களினது பிரதிநிதிகளும் அமரர் இராஜபுவனீஸ்வரன் அவர்களது சமய, ஆன்மீகப் பணிகளைப் பாராட்டி அஞ்சலியுரை நிகழ்த்தினார்கள். பஜனைப் பாடல் நிகழ்ச்சியும் இடம்பெற்றது.

அகில இலங்கை இந்து மாமன்றம்
**ALL CEYLON HINDU CONGRESS**

**To:**

**General Secretary**
All Ceylon Hindu Congress
No. 91/5, Sir Chittampalam,
A. Gardiner Mawatha,
Colombo - 02.